# "ராணுவசதி": ஜனாதிபதி அச்சம்!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 18-8-86 திங்கள் (ஆவணி 2 துல்ஹ 11) முழக்கம் 195

## விஜே தன்னிடம் கூறியதாக உமா மகேஸ்வரன் அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இராணுவச் சதியொன்று ஏற்படலாமென்று ஜனாதிபதி அச்சம் கொண்டுள்ளதாகவும், இதனைத் தவிர்ப்பதற்காகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர் முயற்சிப்பதாகவும் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜே குமாரணதுங்கா தெரிவித்துள்ளார். இத்தகவலை அவர் தம்மிடம் தெரிவித்ததாக 'புளொட்' தலைவர் உமா மகேஸ்வரன் 'புரன்ட்லைனு'க்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். "ஆட்சி நடத்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளன. நாடு பாதாளத்தை நோக்கிப் போயுள்ளது. அதே வேளையில் இராணுவச் சதியொன்று ஏற்படலாமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. விஜே குமாரணதுங்காவுக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அபாயத்திலிருந்து நீங்குவதற்கு பிரச்சினைக்கு நாம் தீர்வு காண (6ஆம் பக்கம் பார்க்க)

★ இரகசிய பொலிஸார் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ள விபரம்

# ஜே. வி. பி. தெற்கில் புத்துயிர்; 10,000 முழுநேர உறுப்பினர்!

## தமிழ்போராளிகளுடன் இவர்கள் இணைந்தும் சில இடங்களில் தாக்குதல் நடவடிக்கை!

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட ஜே. வி. பி. இயக்கம், பத்தாயிரத்துக்கும் அதிகமான முழுநேர உறுப்பினர்களுடன் தென்னிலங்கையில் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதாகவும், கிராமம் கிராமமாக உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சியிலும், தாக்குதல் நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் இரகசிய பொலிஸார் சேகரித்துள்ள தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமான பூரண அறிக்கையொன்று பொலிஸாரினால் ஜனாதிபதிக்கு கடந்த வார இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தென்னிலங்கையில் இயங்கி வந்த அரச விரோத சக்திகளின் சில "சொரியல்" குழுக்களும் ஜே. வி. பியுடன் இணைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தினதும், புத்தளம் மாவட்டத்தினதும் சில எல்லைப் புறங்களில் ஜே. வி. பி. உறுப்பினர்கள் தமிழ் போராளிகளுக்கு ஆதரவாக நடந்து வருவதாகவும், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டு இயங்குவதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யால வனவிலங்குப் பகுதியில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதல் ஜே. வி பி யினரின் திட்டமிட்ட ஒரு நடவடிக்கை எனவும் பொலிஸார் நம்புகின்றனர்.

ஜே. வி. பி. இயக்கத்தினரை தங்களுடன் ஒத்துழைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா அண்மையில் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்ததும், இது பற்றி கடந்த வாரம் அமைச்சரவை அந்தரங்க ஆய்வு நடத்தியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## லண்டனின் மேலதிக தூதுவர் இலங்கை திரும்ப பணிப்பு

(லண்டன்)

லண்டனிலுள்ள இலங்கையின் மேலதிக தூதுவர் திரு. ராஜபக்ஸ உடனடியாக நாடு திரும்புமாறு பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கான காரணங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இன்று அல்லது நாளை அவர் கொழும்பு திரும்பலாமெனத் தெரியவந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பிரசாரப்பிரிவு 'டைரக்டராக'ப் பணியாற்றிய திரு ராஜபக்ஸ சில மாதங்களுக்கு முன்னரே லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மேலதிக தூதுவராக நியமனம் பெற்றிருந்தார்.

## முகாம்மீது தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

நேற்று பிற்பகல் வல்வை முகாமில் இருந்து ராணுவத்தினர் புறப்பட்டு வெளியே வந்தபோது விடுதலைப்புலிகளும், ராணுவமும் நேரடியாக மோதிக்கொண்டனர். இதனால்

—6ஆம் பக்கம் பார்க்க

## தமிழருக்கு ஓரளவு சுயாட்சி

தமிழ் மக்களுக்கான ஓரளவிலான சுயாட்சியை வழங்கத் தாம் தீர்மானித்திருப்பதாகவும், இதனை எதிர்ப்பவர்கள்

—6ம் பக்கம் பார்க்க

கிளிநொச்சியில் நேற்று முன்தினம்

## 'ஹெலி' திடீர் தாக்குதல்! அறுவடை வேலைகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிலநாட்கள் இடைவெளிக்குப்பின் அறுவடைக்காலம் பார்த்து நேற்று முனதினம் திடீரென ஹெலிகப்டர் வட்டமிட்டு துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் அறுவடை வேலைகள் யாவும் தடைப்பட்டன. இப்பகுதி மக்கள் மீண்டும் பதற்றத்துக்குள்ளாகினர்.

—6ம் பக்கம் பார்க்க

## குடாநாட்டில் மூளைக்காய்ச்சல் மீண்டும்பரவுகிறது; ஒருவர்பலி!

(வண்ணார்பண்ணை)

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் பத்து நாட்களின் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தால் மரணமான சம்பவம் நேற்று இடம்பெற்றது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த கலா ரஞ்சன் (19) என்பவரே இவ்வாறு மரணமானவராவர். இவருக்கு மூளைக்காய்ச்சல் நோய் இருந்ததாக கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் முதலில் பல தனியார் வைத்தியசாலைகளில் சிசிச்சையளித்து பலனளிக்காததினால்

—6ம் பக்கம் பார்க்க

## காலையும் மாலையும் மூடுமந்திர பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும், ஜனாதிபதி தலைமையிலான குழுவுக்குமிடையே நேற்று மூன்றாவது தினமாக காலையும் மாலையும் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

காலையில் சுமார் ஒன்றேகால் மணித்தியாலமும், பிற்பகல் சுமார் இரண்டு மணித்தியாலமும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

பேச்சுவார்த்தை விபரங்கள் மூடுமந்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

இன்றுமுதல் புதன்வரை பேச்சுவார்த்தைகள் இடம் பெறாது மீண்டும் புதன்கிழமை பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்.

## மாமடுவ பாடசாலை வளவில் தற்காலிக ராணுவ முகாம்!

(வவுனியா)

பஸ் பயணிகள் பாதுகாப்புக் கருதி மாமடுவ அரசினர் பாடசாலையில் நேற்று தற்காலிக ராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டது.

மாமடுவ பாதையில் கடந்த மாதம் இடம்பெற்ற சம்பவங்கள் போன்று இவ்வாரமும் நடைபெறலாமென்று கிடைத்த தகவல்களையடுத்தே இம்முகாம் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாமடுவ பாதையில் நேற்று படையினரின் ரோந்தும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

அதேவேளையில் ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள தேவாலயமொன்றும் நேற்று கடுமையான சோதனைக்குள்ளானது.

வல்வெட்டித்துறை கடலில்

## ட்ரோலர் மீது 'ஹெலி' சூடு மீனவ இளைஞர் படுகாயம்!

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கடலில் மீன் பிடித்துக் கொண்டு நின்ற ட்ரோலர் மீது பறந்து வந்த ஹெலிகொப்டர் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதால் இளைஞர் ஒருவர்கையில் பலத்த காயமடைந்தார்.

மீன் பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ட்ரோலர் வலை மடியில் கல் விழுந்து விட்டபடியால் மீனவர்கள் அதனைச் சீர் செய்து கொண்டிருந்த சமயம் கடற்கரையோரமாகப் பறந்து வந்த ஹெலிகொப்டர் பல

—6ஆம் பக்கம் பார்க்க

## மட்டுநகருக்கு நாளை முதல் வ. பி. போ. ச. பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்புக்கான இ போ.ச. பஸ் சேவை நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு இப் பஸ் செவ்வாய்க்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு வந்தடைந்து 4 30 மணிக்கு மட்டக்களப்புக்குப் புறப்படும்.

பயணிகள் இன்று காலை 9 மணி முதல் ஆசனங்களைப் பதிவு செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

—6ஆம் பக்கம் பார்க்க

## டில்லியில் பேச்சு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் போராளி இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் நேற்று சென்னையிலிருந்து

—6ம் பக்கம் பார்க்க

# பிரயாண ஒழுங்குகள்

## டென்மார்க், கனடா, லண்டன்

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறார், மத்தியகிழக்கிற்கு.

தச்சுத்தொழில், மேசன், ஒட்டோ எலற்ரிஷியன், A. C. டெக்னீஷின், பிளம்பர், ஹாபர் கிளீனர்ஸ், பிளாஸ்ரிக் கொம்பனி, ஆகியவற்றிற்கு இரண்டு வாரத்துக்குள் பிரயாண ஒழுங்கு மேற்கொள்ளப்படுகிறது. 20ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- முன்பு என்னுடன் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு தொடர்பு கொண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தொடர்பு கொள்ளும் முகவரி:

**N. சிவஞானம்**
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,
பஸ் இலக்கம் 770

R/25302

# அபிவிருத்தி நிதியம்

**இன்று முதல் சேவை ஆரம்பமாகிறது**

எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை முதலாவது பணியாகக் கொண்டு செயற்படும். இதனை அடையும் வகையில் சேமிப்பினை ஊக்குவித்து முதலீடுகளை அதிகரித்து பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்குடன்

★ சேமிப்புகட்கு

- உயர்ந்த வட்டி
- உன்னத பாதுகாப்பு
- தேவையான வேளையில் பணமாக மீளப்பெறும் வசதி

★ அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு

- குறைந்த வட்டியில்
- இலகு தவணையில் கடன் வசதி

★ சீட்டுக்கள் ★ காசோலை மாற்றல்

அனைத்தையும் ஒருங்கே வழங்குவது

**அபிவிருத்தி நிதியம்**

337, கஸ்தூரியார் வீதி, (கன்னதிட்டி)
யாழ்ப்பாணம்.

B/1468

# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

நாம் மீண்டும் டென்மார்க் பயணங்களை ஆரம்பித்துள்ளோம்

- கனடா செல்ல விரும்புவோரை எதுவித இடையூறுகளுமின்றி எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.
- டென்மார்க் செல்ல விரும்புவோரை வாரா வாரம் எமது முகவர் நேரடியாகக் கூட்டிச் செல்வார். வியாழக்கிழமை செல்லவிருக்கும் பிரயாணக் கண்டாயத்தில் சேரவிரும்புவோர் 21-08-86 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.
- ஜேர்மன் செல்வதற்கு உங்களுக்கு பயண ஒழுங்குகள் மிக விரைவில் செய்து தரப்படும்.
- சவூதி அரேபியாவுக்கு வீதி திருத்தும் வேலைக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், மேசன், தச்சுத் தொழிலாளர்கள் பதவிக்கும் செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 புகைப்படங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் ஒழுங்குசெய்து தரப்படும்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

R/25304

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

சந்தோஷ் மினி சினிமா
திருநெல்வேலி
10.30, 2.30, 6.30, 9.30
விஜயகாந்த், ஜீவிதா
**ஊமை விழிகள்**
R/24698

# புதிய பாலர் பாடசாலை

(கரவெட்டி)

''அரசாங்கத்தின் அராஜக நடவடிக்கைகளால் இன்று எமது தமிழ்ப் பாடசாலைகள் சில மூடுவிழாக்காணுகின்றன. சில வதை முகாம்கள், அகதி முகாம்களாக மாறிவருகின்றன. இந்நிலை நீங்கி அனைவரும் கல்வியறிவைப் பெற்று ஓர் புத்தி ஜீவ சமுதாயம் தோன்றுவதற்கு அத்திவாரமாக இச் சிறுவர் பாடசாலை பேருதவி புரிந்து இப் பகுதி மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.''

இவ்வாறு கலிகைக் கந்தன் சிறுவர் பாடசாலை அங்குரார்ப்பண வைபவத்தில் திரு. என். செங்கதிர் உரைநிகழ்த்தினார்.

மேற்படி வைபவத்திற்கு கலிகைக் கந்தன் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. செல்லத்துரை (ஆசிரியர்) தலைமை வகித்தார்.

திரு. செங்கதிர் தொடர்ந்து பேசுகையில், ''ஒருவன் பூரணத்துவமடைவதற்கு அத்திவாரமாகவே பாலர் பாடசாலைகள் அமைகின்றன. இப் பாலர் பாடசாலையில் பெறும் ஒழுக்கப் பண்புகளைக் கொண்டுதான் ஒருவனது வாழ்க்கை அமைந்துவிடுகின்றது. எனவே இப் பாலர் பாடசாலை திறமையான முறையில் நடைபெற்று எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்கி எமது நாட்டிற்கு சேவையாற்றவேண்டும்'' எனக் கூறினார்.

# பிறந்தநாள் வாழ்த்து

❋ நயினாதீவு இரண்டாம் வட்டாரம் சோமேஸ்வரபிள்ளை நகுலேஸ்வரி தம்பதியின் மகன் மகிந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக்கொண்டாடுகின்றார்.

❋ குருநகர் பாடசாலைவீதி எலியாஸ் இந்திரா தம்பதியின் மகள் லக்ஸ்ஷினி இன்றுதனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ கந்தர்மடம் சிவபாலன் தம்பதியின் மகள் சிவசத்தியா இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய வீதி இராயேந்திரம் பூரணம் தம்பதியின் மகள் தர்சினி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

தமிழ் மொழி மூலம் ஆங்கிலம் பயில்வோருக்கு அருமையான ஒரு வாய்ப்பு!

உங்கள் பயிற்சிக்கு மிக உதவியாக வந்துவிட்டது

# LEARNER'S ENGLISH

(லேணோஸ் இங்கிலிஷ்)

143 பக்கங்கள் மட்டுமே கொண்ட இந் நூலை ஆங்கிலம் தெரிந்த ஒருவரின் உதவியுடன் நீங்கள் கற்றுத் தேர்ந்தால் போதும் - ஆங்கில மொழி உங்களிடம் வந்துவிடும்!

ஆங்கில மொழியில் பிழையின்றி எழுதவும், வாசிக்கவும், பேசவும் இந்நூலின் உதவியால் உங்களுக்கு நல்ல ஆற்றல் ஏற்படும். இந்நூலிலுள்ள விளக்கக் குறிப்புகள் யாவும் தமிழ் மொழியில் இருப்பதால் தமிழ் மாணவர்களுக்கு இது மிக வாய்ப்பானது- இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை.

● இது ஒரு 'வரதர் வெளியீடு'

விலை ரூபா 16. இப்பொழுது விற்பனையாகின்றது.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
நல்லூர் திருவிழா அமைப்பிலுள்ள
**பூபாலசிங்கம் புத்தகசாலையிலும்**
இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தியாவசிய சேவைகள் குழு அறிக்கை

# கிளிநொச்சி மக்களின் நெருக்கடியான நிலைமை

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பயன்படுத்தி ஸ்ரீ இலங்கா இராணுவத்தினர் அரச நிர்வாகத்தில் அவசியமற்ற தலையீடுகளை நடத்திப் பொது மக்களையும் அரச நிர்வாகிகளையும் தொல்லைக்குட்படுத்துவதாகக் கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுச் செயலாளர் கவலை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இராணுவக் கெடுபிடியால் இடம்பெயர்ந்தோருக்கு இருவார உணவு விநியோகம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்தபோதும் இராணுவ இணைப்பதிகாரி இதை இராணுவ முகாமில் வைத்துக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியதால் இன்றுவரையும் கொடுபடாமல் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இணைப்பதிகாரியைச் சந்திக்கச் சென்ற கிராமசேவையாளர்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்தி செல்லப்பட்டதால் இணைப்பதிகாரியைச் சந்திக்க முடியாத கிராம சேவையாளர்களுள் குறிப்பாக கிளிநொச்சி நகர கிராம சேவையாளர் இணைப்பதிகாரியின் பணிப் பின்பேரில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இதனால் உணவு முத்திரை போன்றவற்றின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

கமக்காரர்களின் தேவைக்காக குளத்திலுள்ள நீரை நீர்பாசன இலாகா உத்தியோகத்தர்கள் திறந்துவிட இராணுவத்தினர் தடுத்துக் குளத்தைப் பூட்டி விடுகின்றார்கள். இதனால் கமங்கள் பாழாகின்றன.

இப்படியான செயல்களால் பாதிக்கப்படும் பொதுமக்கள் அரச நிர்வாகிகளிடம் எடுத்துக் கூறினால் அவர்கள் தங்களின் இயலாமையை கூறித் திருப்பிவிடுகின்றனர். ஆனால் பாதிக்கப்படுவது பொது மக்கள்தான் என்று அத்தியாவசிய சேவைகள் குழு அறிவித்துள்ளது.

# தையல் பயிற்சி

(சரசாலை)

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள யுவதிகளின் நன்மை கருதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச தையல் பயிற்சி வகுப்பை நடத்த முன்வந்துள்ளனர்.

# அபுதாபியில் வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| (1) | SAVAL OPERATER | (3 பேர்) | 600 திரும்ஸ் |
| (2) | LABOURERS | (33 பேர்) | 550 திரும்ஸ் |
| (3) | MASON | (3 பேர்) | 700 திரும்ஸ் |
| (4) | FITTER | (3 பேர்) | 700 திரும்ஸ் |
| (5) | FARMER | (3 பேர்) | 650 திரும்ஸ் |
| (6) | FARM SUP. | (3 பேர்) | 800 திரும்ஸ் |
| (7) | C'RPENTER | (3 பேர்) | 700 திரும்ஸ் |
| (8) | ELECTRICIAN | (3 பேர்) | 800 திரும்ஸ் |
| (9) | MECHANIC ENGINEERS | (3 பேர்) | 1500 திரும்ஸ் |
| (10) | DRIVER | (3 பேர்) | 1000 திரும்ஸ் |
| (11) | SERVICE STATION CLEANERS | (10 பேர்) | 700 திரும்ஸ் |

8 மணித்தியால வேலை நேரம் (மேலதிக வேலை வாய்ப்பு)
வயது: 20 — 45

## குவைற்

கிளீனேர்ஸ்:- வயது: 18 — 40 வரை
அனுபவச் சான்றிதழ் [2 வருடம்]
PASSPORT உடனும், 12 பாஸ்போட் சைஸ் படங்களுடனும் உடன் நேரில் வரவும்.
சம்பளம்: 4000/-

**கனரக வாகனச் சாரதிகள்: 8200/-**

## ஜேர்மனி

ஜேர்மனி நாட்டுக்கான விசா பெற்றுக் கொடுக்கப்படும். பெற விரும்புவோர் அல்லது எம் முகவருடன் செல்ல விரும்புவோர் 6 படத்துடன் நேரில் வரவும். குடும்பமாகச் செல்ல விரும்புவோருக்கு உடன் விசா பெற்றுக்கொடுக்கப்படும்.

குறிப்பு: எம்மிடம் ஜேர்மனி செல்ல விரும்பி PASS PORT டும், முற்பணமும் தந்தவர்கள் உடன் நேரில் வரவும்.

**"துர்க்கா என்ரர்பிறைசஸ்"**
மெயின் றேட், சுன்னாகம்.
R/25301 [நாகம்ஸ் சினிமா தியேட்டர் முன்பாக]

★ இன்று ரதோற்சவம்

# நயினை நாகபூஷணி அம்மன்; அவள் ஒப்பில்லாத் தாய்

ஈழமணித் திருநாட்டின் வடபால் உள்ள இணையில்லாத் தலைநகராம் யாழ்ப்பாணத்திற்கு அருகேயுள்ள சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது நயினாதீவு. சரித்திரப் பிரசித்தி பெற்றதும் வரலாற்று ஆசிரியர்களினால் சிறப்பித்துக் கூறப்படுவதுமாகிய இத் தீவினில் சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கினில் ஒன்றாக திகழும் புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்து அருள்பாலித்துக் கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணியாள்.

அகிலாண்ட கோடியாகி அண்டமெல்லாம் பூத்தவளாகிய அன்னை பராசக்தி புவியடங்க காத்தருளும் வண்ணம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த ரூபியாகி நின்று ஆன்ம கோடிகளை இரட்சிக்கின்றாள். எல்லாம் வல்லவளாக எல்லாம் அறிபவளாக பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து பரிபூரணானந்தமாகி நிற்பவள் அவள். வேண்டத் தக்கது அறிபவளாக, வேண்டும் முழுவதும் தருபவளாக நின்று வேண்டுவார்க்கு வேண்டுவன ஈபவள் அவள்.

நந்தாத வரமுதவும் நங்கையாகத் திகழும் நயினை நாகபூஷணியாளை சிந்தாகுலம்கொண்டு யான் திரிதல் நீதியோ? எனக்கேட்டு, வாடிய முகத்தோடு தேடிநிற்கும் அடியார்கள் ஒருபுறம். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு இல்லங்கள் தோறும் அவளின் இன்னருளை வேண்டிநிற்கும் அடியார்கள் ஒருபுறம். நன்றே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை ''உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்துவிட்டேன். நான் அறிவது ஒன்றேயும் இல்லை. அழியாத குணக்குன்றே அருட்கடலே'' என்று ஆராத பக்தியுடன் அலைகடலைத் தாண்டிவந்து அவளின் அருட்கடலை வேண்டிநிற்கும், அடியார்கள் ஒருபுறம். அத்தனை பேருக்கும் சித்தம் இரங்கி அருள்பாலித்துக்கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணியாள்.

ஆசைக்கடலில் அகப்பட்டு அல்லற்பட்டோரை எல்லாம் தன் நேசக்கரத்தினால் காத்தருளியவள். வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரைப் பொறுக்கும் தகைமையுடையவளாக விளங்குபவள். தாய் இரங்காவிடில் சேய் உயிர் வாழுமோ ஆதலால் அகில உலகினிற்கும் தாயாகி நின்று தன் அருள் சுரந்தளித்து காத்தருள்பவள். நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் நினைந்துருகும் அடியார்க்கு அழியாத பேரின்பத்தை அள்ளி வழங்குபவள். அவள் தன்னை நாடிநிற்கும் அன்பர் என்பவர்க்கு அழியாத குணக்குன்றாக நின்று நல்லன எல்லாம் தருபவள். தம்மடியார் பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழ வழிகாட்டுபவள், வல்வினைகளை எல்லாம் ஓட்டுபவள்.

கலையாத கல்வி, குறையாத வயது, கட்டுவாராத நட்பு குன்றாத இளமை, கழுபிணி இல்லாத உடல், சலியாத மனம், அன்பகலாத மனைவி, தவறாத சந்தானம், தாளாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வாராத கொடை, தொலையாத நிதியம், கோணாத கோல், துன்பம் இல்லாத வாழ்வு துய்ய நின் பாதத்தில் தூய அன்பு என்கின்ற பதினாறு பேறும் நல்கி அலையாழி அறி துகில் கொள் மாயனது தங்கையாகி நின்று அலைகடல் நடுவே அருள்பாலித்துக்கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணியாள்.

பெற்றதால் அன்னையாக, பெறும் உயிர் அனைத்தும் பேணலால் அன்னையாக, பெற்றிடுவோர் உற்றதால் அன்னையாக, விரும்பிய அனைத்தும் உதவலால் அன்னையாக, எக்கலையும் சொற்றதால் அன்னையாக, உலகொடு வானும் தொழுதலால் அன்னையாக, என்றென்றும் பற்றதாங் கருணை பொழிதலால் அன்னையாக' விளங்குபவள் பராபரை நாகபூஷணியாள் என்கின்றார் நயினை வரகவி நாகமணிப் புலவர் அவர்கள். எனக்கென்றோர் தனி வரம் நான் கேட்கவில்லை என் இனத்தார் வாழ்வென்றே கருதவில்லை. உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும் சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன் எனக்கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்த தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே என நாம் எல்லோரும் வேண்டி நின்று எல்லாம் வல்ல அம்பிகையின் பாதாரவிந்தங்களை பணிவோமாக. எல்லா வல்ல ஈஸ்வரி எம் எல்லோருக்கும் இன்னல் களைந்து இன்புற்று வாழ நல்லருள் பாலிப்பாளாக.

அண்மைக் காலத்தில் அம்பிகையின் ஆலயத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தினம் தோறும் நூற்றி ஒரு அபிராமி அந்தாதி பாடல்களையும் தொடர்ந்து நூற்றி எட்டுத்தினங்களுக்கு பாராயணம் செய்து வந்து, தற்போது வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அடியார்கள் நலன் கருதி வழமைபோல் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் அமுதசுரபி அன்னதான சபையினரால் சிறப்பான முறையில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது.

நயினை
மதி-புஷ்பாகரன்

பொது முகாமையாளர் பேச்சு

# வீடமைப்புக்கடனை மீள செலுத்தாதோர் இன வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிப்போர்

(அச்சுவேலி)

'பத்து இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பணம் அரசாங்கத்திற்கு மீண்டும் திருப்பிச் செலுத்தப்படுவதில்லை. அந்தப்பணம் தொடர்ந்தும் யாழ். மாவட்ட மக்களின் வீடமைப்பு தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் தப்பான எண்ணத்துடன் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் காலம் கடத்துவது தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும். இவர்கள் தமிழ் மக்களின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவித்தவர்கள் என்ற அடிப்படையில் சமூகத்தால் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு வடபிராந்தியத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் திரு பூ. முருகையா தெரிவித்தார்.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு தி. கமலநாதன் தலைமையில் ஐக்கிய நாணயசங்க பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் கலந்து கொண்டு திரு. முருகையா தொடர்ந்து உரையாற்றுகையில் ஐக்கிய நாணய சங்கங்களிடம் மிகப் பொறுப்பான பணிகள் ஒப்படைக்கப்படவுள்ளன. எதிர்காலத்தில் வீடமைப்புக் கடன் திட்டங்களை கிராம மட்டத்தில் சிபார்சு செய்வதும் கடன்களை அறவிடுவதும் ஐக்கிய நாணய சங்கங்களின் பணியாகும்.

கடந்தகாலத்தில் இந்தக் கடன் சிபார்சுகளை செய்வதில் ஏற்பட்ட தவறுகளினால் இன்று சிலபகுதி மக்கள் வீடமைப்புக்கடன் வசதியை பெற முடியாமல் இருக்கின்றனர்.

பலர் அரசாங்கப்பணம் தானே திருப்பிச் செலுத்தாவிடில் என்ன என்ற எண்ணத்துடன் காலம் கழிக்கின்றனர். இந்தநிலை ஏற்படாத அளவிற்கு ஐக்கிய நாணயச் சங்க நிர்வாகிகள் செயற்படவேண்டும்.

தற்பொழுது 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில் கடன் வசதியைப் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு 1250 ரூபாவாக கணிக்கப்படுகின்றது. இது முன்னர் ஆயிரம் ரூபாவாக இருந்து வந்தது. 1984 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பத்துலட்சம் வீட்டுத்திட்ட கடன் முறையின் கீழ் சிபார்சு செய்யப்பட்ட சிலர் உரிய நோக்கத்திற்கு அந்தப் பணத்தை பயன் படுத்தாமல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது 1986 ம் ஆண்டிற்கு 56 லட்சம் ரூபா யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை மிகவும் நல்லமுறையில் நாம் பயன்படுத்த வேண்டும்'' என்றார்.

சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் உரையாற்றுகையில் எதிர்காலத்தில் ஐக்கியநாணய சங்கங்களின் பணி கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும். உறுப்பினர் தொகை குறைந்ததாக கிராமம் கிராமமாக ஐக்கியநாணய சங்கங்களை அமைப்பதன் மூலம் மக்களின் தேவையை அறிந்து நிறைவு செய்ய முடியும். ஐக்கிய நாணய சங்கங்கள் அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங்களாக செயற்படுகின்றன. அங்கத்தவர் மத்தியில் சீட்டு பிடித்தல் போன்ற முறையில் மாதம் மாதம் பங்குகளைப் பெற்று அந்தப் பணத்தைக் கொண்டு கடன் வசதிகளை செய்து கொடுக்கலாம். கடன் வசதியை செய்யும் அதே நேரத்தில் அந்தக்கடனை திருப்பி அறவிடுவதற்கும் ஏற்பாடுகளை செய்ய வேண்டும். பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதில் தவறுவதால் நாம் பல நன்மைகளை இழந்துவிடுகின்றோம்.

1978ம் ஆண்டுக்குபின்பு விவசாயக்கடன் யாழ். மாவட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. காரணம் கடன்பெற்ற 24 ஆயிரம் பேர் கடனை திருப்பிச் செலுத்தவில்லை. இந்தக்கடனை திரும்பிச் செலுத்த தவறியவர்களில் பெரும்பாலானவர்கள் அச்சுவேலி, நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்தியத்தில்உள்ள விவசாயிகள் ஆகும். அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பகுதியில் 7500 பேர் 77 இலட்சம் ரூபா கடனை திருப்பிச்செலுத்தவில்லை. நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பகுதியில் 2500 பேர் கடனை திருப்பிச்செலுத்தவில்லை எனக் கூறினார்.

கோப்பாய் மிருக வைத்திய அதிகாரி ச. சுப்பிரமணியம் உரையாற்றும் போது ஐக்கிய நாணய சங்கங்கள் சிறப்பாக செயற்படுமானால் தமது பகுதியில் பலவேறு பொருளாதாரத் திட்டங்களை நிறைவு செய்யமுடியும். எமது திணைக்களம், கால்நடை அபிவிருத்திக்கு பல திட்டங்களை வகுத்து செயற்படுத்துகின்றது. கால்நடைக்கான புல்லு வளர்ப்பதற்கு ஏக்கருக்கு 1500 ரூபா மானியம் வழங்குகின்றது. கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு பணமாக 3500 ரூபா வழங்குகின்றது. கால்நடைக்கான காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இவற்றை தமது பகுதியில் ஐக்கியநாணய சங்கங்கள் நடைமுறைப்படுத்த முன் வரவேண்டும் எனக் கூறினார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை பெரும்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பி. கந்தையா அச்சுவேலி ப. நோ. கூ. சங்க முகாமையாளர் திரு. எம். ஆனந்த கிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

# "ஐக்கிய நாணய சங்கங்கள் பன்முக சேவை புரிவது உணரப்படவேண்டும்"

(சுண்டுக்குளி)

''ஐக்கிய நாணய சங்கங்கள் இன்று கிராம மக்களுக்கு இன்றியமையாததாக வாழ்வோடு இணைந்து விட்டன. மாதாந்தம் சிறுதொகைப் பணத்தை ஐக்கிய நாணய சங்கச் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட்டு வருவதால் சிறுதுளி பெருவெள்ளமாக அவை பெருகி வருவதுடன் உறுப்பினரின் அவசர தேவையின் போது இச்சங்கங்களிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது. சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முதலீட்டையும் ஐக்கிய நாணய சங்கம் வழங்கத் தயாராக உள்ளது.''

இவ்வாறு சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. திரு. கே. சண்முகலிங்கம் தொடர்ந்து பேசும்பொழுது ''1911ம் ஆண்டு ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் கூட்டுறவு இயக்கத்திற்கான வித்து யாழ்ப்பாணத்தில் விதைக்கப்பட்டது. பின்னர் இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வசதியாக மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. அவை பின்னர் மக்களின்பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பரிணமித்தன. உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கணிசமான எண்ணிக்கையில் ஐக்கிய நாணய சங்கங்கள் இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது இப்பிரிவிலுள்ள ஐந்து ஐக்கியநாணய சங்கங்கள் தமது சொந்தச் சேமிப்பாக இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக வைத்திருப்பது பெருமையளிக்கின்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபை பத்து இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களும் வீடமைத்துக் கொள்ளக் கூடியதாக ஏற்படுத்தியுள்ள கடன் வசதியைப் பெறுபவர்களிடமிருந்து மாதாந்த தவணைப் பணத்தை அறவிடுவதற்கு உதவும் முகமாக அமைப்பு முறையில் ஐக்கிய நாணய சங்கங்களையே நாட வேண்டியுள்ளது. இந்நோக்கத்திற்காகவே கிராமந்தோறும் ஐக்கிய நாணய சங்கங்களை அமைத்தும், புனரமைப்புச் செய்தும் வருகின்ற போதிலும் இச்சங்கங்களின் பயன் அளப்பரியன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். சிறப்பாக இயங்கி வரும் சங்கங்கள் ஐக்கிய நாணய சங்கங்களின் அவசியத்தை உணர்த்துகின்றன'' என்றார்.

## இவர்களுக்குபரிசு

(பூநகரி)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால்கிளிநொச்சி மாவட்டத்துக்கான குறைந்த செலவிலான அழகிய வீடமைக்கும் போட்டியில் முழங்காவில் வாசியான கந்தையா பரம்சோதி என்பவர் முதல் பரிசைப் பெற்று தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்படும் 15000/- ரூபாவை பரிசாகப் பெறவுள்ளார்.

இரண்டாம்பரிசு பளை வாசிக்கும் மூன்றும் பரிசு கிளிநொச்சி வாசிக்கும் கிடைத்துள்ளது.

உ
முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986



இன்று 9-ம் திருவிழா

காவடிச் சிந்து

அண்ட மாமுக டுந்துகர்ந் தேவிழ
ஆயிரம் அம்புகள் எய்தான் – பதின்
ஆயிரம் மாயங்கள் செய்தான் – சூரன்
அன்பனுகினன் கண்கள் ஊடுபேர்
இன்ப மாநதி பொங்கியே வர
என்பெலாம் மெழுகாகிய சேகிகள்
காவிய மாகவே சொல்வார்! அன்பர்
காலனை மோதியே வெல்வார்!

—சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

உதய சிந்தனை

அறிவில்லாமையே இல்லாமை பலவற்றுள்ளும் கொடிய இல்லாமையாகும்; மற்ற இல்லாமைகளை உலகம் அத்தகைய இல்லாமையாகக் கருதாது. -திருக்குறள்

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

18-8-86 திங்கட்கிழமை (அக்ஷய) ஆவணி 2

# சமூக விரோதச் செயல்களில் ஒன்று

சிவில் நிர்வாகம் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழர் பிரதேசங்களில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பது சட்டவிரோத மின் பாவனையாகும்.

தினசரிப் பத்திரிகைகளைத் தொடர்ந்து படிப்பவர்கள் சட்டவிரோத மின் பாவனையையும், அதனைத் தடுக்க அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளையும், இதனால் நேர்மையான மின் பாவனையாளர்கள் படும் தொல்லைகளையும் தொடர்கதை போலத் தெரிந்துகொள்ள முடியும்.

''கள்ளக் கரண்ட்'' என்று செல்லமாக அழைக்கப்படும் சட்டவிரோத மின் பாவனை, தற்போது அசுர உருவமெடுத்து, பல்வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டை மோசமாகப் பாதித்து வருகின்றது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணராதிருக்க முடியாது.

உத்தியோக பூர்வமான மின் விநியோகத்தைப் பெறுவதற்காக பணம் செலுத்திவிட்டு மாதக் கணக்காகப் பெருந்தொகையானவர்கள் காத்துக் கொண்டு தவமிருக்கின்றனர்.

ஆனல் பல்லாயிரக் கணக்கானவர்கள் ஒரு தடியின் உதவியுடன் இரண்டு கம்பிகளைத் தொடுத்துவிட்டு இலகுவான மின் சாரத்தைப் பெறுகின்றனர்.

''சட்டம் என் கையில்'' என்று போக்குடன் எவரையும் மதிக்காமல், எந்த அதிகாரிகளுக்கும் அச்சமின்றி இவ்வாறு நடந்துகொள்வதால் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வரும் எதிர் விளைவுகள் பல.

சட்டவிரோத மின் இணைப்பினல் ஏற்படும் பாதுகாப்பின்மை காரணமாக எத்தனையோ உயிர்கள் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்டுள்ளன.

வீதிகளுக்குக் குறுக்காகவும், வளவுகளுக்குள்ளாகவும் இழுக்கப்பட்ட பாதுகாப்பற்ற வயர்களில் சிக்கியதாலேயே பலரும் மரணமாக நேர்ந்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்குள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோத மின் பாவனையைத் தடுக்கும் வேட்டைகளையும் அதிகாரிகள் நடத்தியுள்ளனர்.

இதனல் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமானமுள்ள சட்டவிரோத மின் கம்பிகள் சந்திகளிலும், பொது இடங்களிலும் வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் கள்ள மின் பாவனையை 'வெட்டு'வதற்குச் சென்ற ஊழியர்கள் தாக்கப்பட்ட போதிலும், அவர்கள் தொடர்ந்தும் தமது கடமையைச் செய்து வருவது போற்றுதற்குரியது.

கடந்த வாரம் வேலணை, வடமராட்சி ஆகிய முக்கிய இடங்களில் மின்மாற்றிகள் (ட்ரான்ஸ்போமர்கள்) பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறின.

இதனல் அந்தப் பகுதிகள் இருளில் மூழ்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு மின்மாற்றிகள் வெடிப்பதற்குக் காரணம் என்ன?

சட்டவிரோத மின்பாவனைதான் காரணம் என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறர்கள்.

ஒவ்வொரு மின்மாற்றிக்கும் குறிப்பிட்டளவு மின் விநியோகம் செய்யும் சக்தி மட்டுமேயுண்டு. அதற்கேற்ற வகையிலேயே அதிகாரிகள் பணம் செலுத்தியவர்களுக்கு மின் விநியோகம் செய்கின்றனர்.

ஆனல் குறிப்பிட்ட மின் மாற்றியிலிருந்து சட்டவிரோத மின் விநியோகம் பெறப்படும் போது அந்த மின் மாற்றியின் சக்திக்குக் கூடுதலாக மின் விநியோகம் செய்ய முடியாதநிலை ஏற்படுகையில் அது வெடித்துச் சிதறுகின்றது.

மாவட்ட சபை உப அலுவலகங்களும் உள்ளூராட்சி மன்றங்களும் இலங்கை மின்சார சபையிடம் மின்சாரத்தைக் கொள்முதல் செய்தே, பாவனையாளர்களுக்கு வழங்குகின்றது.

மின்சாரம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதல்ல.

இதனல் சட்ட விரோத மின் விநியோகமும் சேர்ந்து மாதமொன்றுக்கு உள்ளூராட்சி சபையொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவுக்கு கட்டணம் வரும் போது மீட்டர்பொருத்தப்பட்ட மின் விற்பனை மூலம் அசன் அரைவாசிப் பணமே அச்சபைக்கு கிடைக்குமானல் சட்டவிரோத மின் பாவனைப் பணத்தை யார் செலுத்துவது?

இதனல் சில குறிப்பிட்ட சபைகளின் பிரதேசங்களுக்கான மின் வழங்கலை மின்சாரசபை துண்டிக்கக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவைகளை உணராமல் எமதுமக்கள் பொறுப்பின்றி நடந்து கொள்வது முறையற்ற செயலாகும்

இதனைத் திருட்டு என்று கூறமுடியாது; சமூக விரோதச் செயல் என்றே கணிக்க வேண்டும்.

★ யாழ். பல்கலைக் கழகத்தின் ஒரு வாரச் சம்பவம் பற்றிய கண்ணோட்டம்

# ஒழுக்கமாக நடந்தால் இந்தப் பிரச்சினை ஏற்படுமா? தட்டிக்கேட்டால் 'வெளியார்'!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இந்த வருடம் புதிய மாணவர்கள் வருகையின் போது, 'ராக்கிங்' நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனக் கோரியும் ஈடுபடும் பட்சத்தில் கடும் நடவடிக்கை தம்மால் மேற்கொள்ளப்படுமென எச்சரித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளினுல் பல நாட்கள் முன்னரே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தும், பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடப்பட்டுமிருந்த போதிலும், பல்கலைக்கழகத்திற்கு வெளியே புதிய மாணவிமீது மேற்கொள்ளப்பட்ட 'ராகிங்' நடவடிக்கை காரணமாக மூன்று மாணவர்கள் விடுதலைப் புலிகளினுல் தண்டிக்கப்பட்டதை காரணம் காட்டி மாணவர் குழாம் ஒன்று விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கைகளில் குதிக்க, இந்த பகிஷ்கரிப்பு ஏன், எதற்காக நடக்கிறது என்பதை அறியாமலேயே மீதி மாணவர்களில் பலர் பகிஷ்கரிப்பில்சேர்ந்துகொள்ள யாழ். பல்கலைக்கழகம் கடந்த ஒருவார காலமாக அல்லோல கல்லோலப்பட்டது.

புலிகளின் இந்த நடவடிக்கையை எதிர்த்து விஞ்ஞான பீட மாணவர்கள்"என்ற பெயரிலும், முதலாம் வருட மாணவர்கள் என்ற பெயரிலும், வேறும் பல துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமாய் ''வெளியார் தலையீடு பல்கலைக்கழகத்தில் வேண்டாம்'' என்ஞெரு கோரிக்கையும் ''பல்கலைக்கழக அறிமுக அட்டை மூலமே உட்பிரவேசிக்க அனுமதிக்கப்பட வேண்டும்'' என்ற மற்ருெரு கோரிக்கையும் காணப்படுவது பலருக்கும் வியப்பையும் வேதனையையும் ஒருங்கே தோற்றுவித்திருக்கிறது (ஏனைய கோரிக்கைகளும் கூட அர்த்தமுள்ளவை என்று தோன்றவில்லை)

பல்கலைக் கழகத்தில் 'வெளியார்' யார்? 'உள்ளார்' யார்? அதைத் தீர்மானிப்பது யார்? பல்கலைக்கழக மாணவனெருவன் வீதியில் கொலை செய்துவிட்டுப் போனலும் யாருமே கேட்கமுடியாத நிலை! ஏனெனில், செய்துவிட்டுப்போவது பல்கலைக்கழக மாணவன்—தட்டிக் கேட்பவன் எவனும் 'வெளியார்' என்ற முத்திரை குத்தப் பட்டுவிடுவான்! இதுதான் இவர்கள் கல்வியின் மேம்பாடா? ஒரு மாணவியோ, மாணவனே பாதிக்கப்பட்டால் அது தொடர்பாக அவர்களுடைய பெற்றோர் பல்கலைக் கழகத்தினுள் போய் யாரையுமே கேட்டுவிட முடியாது! ஏனெனில், அவர்களிடம் பல்கலைக்கழக அறிமுக அட்டை இல்லை! இந்தவகையில் பார்த்தால் ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனும் இந்தக்கோரிக்கை மூலம் தன்னைப் பெற்றவர்களையே வெளியார் என்று சொல்வது போலாகிறது. அதுதான் உண்மையா?

இந்த மாணவர்களுடைய சொத்துக்களையோ அல்லது அலுவலகங்களையோ உரிமை கோரி வேறு யாராவது இவர்களைப் பிரச்சினைக் குள்ளாக்கிரூர்களா? நாம் அறிந்தவரை அப்படி எதுவுமே இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. அப்படி இருக்கும்போது ''பல்கலைக்கழக சொத்துக்கள் — அலுவலகங்கள் யாவும் மாணவருக்கு உரிமையாக்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கை ஒன்றையும் முன்வைத்திருக்கிறர்கள். உரிமை பறிக்கப்படும்போதுதான் இழந்தஅந்த உரிமைக்கான போராட்டம் ஆரம்பமாகிறது. 'ராகிங்' என்று இவர்கள் செய்யும் அடாவடித்தனங்கள் இவர்களது உரிமையா? தீமை என்பது எவருக்கும் 'உரிமை' ஆகிவிடாது.

இந்த மாணவர்களிடம் என்ன கேட்கப்பட்டுவிட்டது? ஒழுக்கமாய் இருங்கள் ஒழுக்கம் பேணி நடவுங்கள் என்பது தவிர வேறெதுவும் கேட்கப் பட்டதா?'பல்கலைக்கழக மாணவரை மக்களில் இருந்து அன்னியப்படுத்தி மாணவர்மீது அடக்கு முறைகளைப் பிரயோகிக்க முற்படுகிறர்கள். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்' எனக் காணப்படுகிற அதே பிரசுரத்திலேயே வெளியார் தலையீடு வேண்டாம்' எனக் கோரிக்கை விட்டு எம்

**பகலவன்**

மை-மக்களை-இவர்களே தம்மிலிருந்து அன்னியப்படுத்தி விட்டார்களே! நாம்-மக்கள் மாணவர்களுக்கு வெளியாரா? அல்லது முக்கியமாய் இன்று யாழ்ப்பாணத்தில் இவர்கள் சுதந்திரமாய் நடமாடவும் இராணுவக் கெடுபிடியின் பயமின்றி இருக்கவும் காரணமாய் தங்கள் உயிரையே கொடுக்க எக்கணமும் தயாராய், எங்கள் சமூகத்தைப் பாதுகாத்து நிற்கும் அந்த விடுதலைப் போராளிகள் வெளியாரா? இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அவர்கள் வேண்டும் தீமைகளை தட்டிக்கேட்க அவர்களுக்கு உரிமையில்லையாம்! தட்டிக்கேட்டால் மாணவர்கள் பகிஷ்கரிப்பு மேற்கொள்கிறர்கள். இவர்கள் யாவரும் சுய சிந்தனை அற்றுப் போய்விட்டார்கள் போலவே தெரிகிறது.

மேற்குறிப்பிட்ட இந்த நியாயத்தைக் காட்டி 2ஆம் வருட மாணவி ஒருவருடன் கதைத்த போது அம்மாணவி 'வெளியார் தலையிடவேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. ஆனல் இந்த பிரச்சினையை புலிகள் அணுகிய முறை தவறு என்றுதான சொல்கிறேம்' என்று சொன்னர். என்ன தவறு எனக் கேட்டபோது 'இவர்கள் தண்டனை வழங்க முன் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்து ஆலோசித்த பின் செய்திருக்கலாம். ஏன் அப்படி செய்யவில்லை?' எனக் கேட்டார்.

அதிர்ஷ்டவசமாய் குறிப்பிட்ட ராகிங் சம்பவத்தை நேரில் கண்டவரும், இநத பிரச்சினைகளில் முக்கியமாய் சம்பந்தப்பட்டவருமான ஒரு விடுதலைப் புலியையும் குறிப்பிடட அந்த மாணவியையும் நேரில் வைத்து கதைகக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக கிடைத்தது. மாணவியே நேரில் அவரிடம் தனது சந்தேகங்களைக் கேட்டார். (சம்பவத்தின் போது வேறும் நாலைந்து மாணவியரும் நேரில் இருநதனர்.) அந்த சம்பாஷணையனபோதுதான் நடந்த வபரம்– ராகிங் செய்த மாணவர்கள் நடந்து கொண்ட விதம்– அவர்கள் மூவருமே பகிரங்கமாய் தமது குறறததை ஒப்புககொண்டது. அவர்களைப் பிடித்த பினனர் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இவ்விஷயமாய் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தி– நிர்வாகம் அனுமதித்ததன் பேரிலேயே அவர்களைத தம்முடன் கூட்டிச் சென்றது போன்ற உண்மைகள் அந்த மாணவிகளுக்கு தெரியவந்தது. (கைதான மாணவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.)

இவர்களுக்கு மட்டுமல்ல பல்கலைககழகத்தில பகிஷ்கரிப்பு மேற்கொள்ளும் 90 வீதமான மாணவர்களுக்கும் நடந்த உண்மைகள் ஆன்று கூட தெரியாது. தெரியாது என்பதை விடவும் தெரிந்துகொள்ள இந்த மாணவர்கள் முற்படவில்லை என்பதே மிகவும் வேதனைக்குரியது.

உண்மை தெரிந்த மாணவர்கள் தெரிந்தபிறகாவது அர்த்தமற்ற இந்த பகிஷ்கரிப்பிற்கும் எதிராக குரல் கொடுப்பார்களா?

கடந்த ஒருவார காலத்தில் அவ்வப்போது நடந்த செய்முறைப் பரீட்சைக்கும் ஒருசில விரிவுரைகளுக்கும் சில மாணவர்கள் பகிஷ்கரிப்பை முன்னெடுத்த மாணவர்கள் உட்பட சமுகமளித்தார்கள் என்பதும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து காதில் விழுந்த விஷயம்!

## 2ஆம் கட்ட பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக்குழுவின் அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்டப்பயிற்சி வகுப்புகள் கைதடி நவில்ட் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகின.

அறவழிப் போராட்டக் குழு தலைவர் திரு. வி. எஸ். துரைராஜா தலைமையில் ஆரம்பமான இந்த இரண்டாம் கட்டப்பயிற்சி வகுப்பில் 25 பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## உயிர்க்காப்புச் சேவை

பிரசித்திபெற்ற நயினதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தின் போது ஆலயத்திற்கு வரும் அடியார்களின் நன்மை கருதி ஆழ்கடல் உயிர் காப்புச் சேவை இம்முறையும் நடைபெறும்.

நயினதீவ ஸ்ரீஞானவைரவர் கழகமும் ஆலய அறங்காவலர் சபையும் இணைந்து இச் சேவையை நடத்தவுள்ளன.

இதேவேளையில் ஆலயத்தில் சுற்றுப் பிரகாரத்திலும் துறைமுகங்களிலும் நயினதீவு இறை பயணிகள் தொண்டர் படையினரும், நயினதீவு மகா வித்தியாலய சாரணர்களும், சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையினரும் கடமையாற்றுவர்.

★ மகோற்சவ காலக் கட்டுரை

# குப்பிழான் பதி கற்கரை கற்பக விநாயகர் ஆலயம்

நூறு வீதம் சைவ மக்களைக் கொண்ட குப்பிழான் பதி கற்கரைக் கற்பக விநாயகன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 10ம் திகதி ஆரம்பமானது. இன்று தேர்த்திருவிழா.

குப்பிழான் வாழ்மக்களுக்கும்- மாந்தைக்கும் இடையே ஆதிதொட்டு இன்று வரை நெருங்கிய தொடர்புகள் உள்ளன. போக்குவரத்து வசதிகள் அற்ற அக்காலத்தில் எமதூர் மக்கள் கொழும்புத்துறை சென்று தோணி ஏறி பூநகரித் துறையில் இறங்கி, அங்கிருந்து காட்டுமார்க்கமாக நடந்து சென்று, மாந்தையிலும் அடுத்துள்ள பகுதிகளிலும் தம் கருமங்களைச் செய்வார்களாம். இவ்வாறு வியாபார நோக்கோடு எமதூரில் இருந்து புறப்பட்டு சென்ற அடுகாஞ்சி-படுகாஞ்சிஎன்றசகோதரர்களை வழிமறித்து ஆவர்கள்கொண்டு சென்ற பொருட்களைக் கொள்ளையிட சிலர் முயன்றுர்களாம்.

மதி நுட்பமும்- விநாயகன் அருள் பெற்றவர்களுமான அச் சகோதரர்கள், அக்கொள்ளையரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அக்கொள்ளையரிடத்து, தாங்களும் கொள்ளைக் கோஷ்டியில் சேரவே வந்ததாக குறிப்பிட்டனர். அதை நம்பிய கொள்ளையர் தலைவன், அவர்களிருவரையும் தம்முடன் சேர்த்துக் கொண்டான். ஆனல் அக் கொள்ளையர் கூட்டதனின் சகவாசத்தை விரும்பாத அவ்விரு சகோதரர்களும் ஒரு நாளிரவு அக்கொள்ளையர் சேர்த்து வைத்த பொருட்களையும் அள்ளிக்கொண்டு ஊருக்கு ஓடி வந்தனர். அவ்வாறு கொண்டுவந்த பொருட்களைக் கொண்டு ஒரு கோவில் அமைக்க முற்பட்டனர். இவ் வேளையில் அக் கொள்ளைக்கூட்டத் தலைவன் இவ்விருவர்களையும் தேடிக்கண்டுபிடித்து கைது செய்ய முயன்முன். இதனல் கலக்கமடைந்த அடுகாஞ்சியும் -படுகாஞ்சியும் பதறியவர்களாக விநாயகனை நினைந்து கதறினர். உடனே அக் கொள்ளைப் பொருட்கள் யாவும் தூக்க முடியாதவாறு கல்லாக மாறின. இதனைக்கண்ட கொள்ளைக் கூட்டத் தலைவன் நடுநடுங்கி தன் கொள்ளைத் தொழிலைவிடுத்து- விநாயகனை நினைந்து அவனுக்கு ஒரு கோவிலைத் தானே அமைக்க முற்பட்டான். அக்கோவிலே இன்று குப்பிழான் பதிவாழ் மக்களைக் காக்கும் விநாயகன் வீற்றிருக்கும் கோவிலாகும்.

இக்கோவிலின் படிப்படியான வளர்ச்சியின் பின்னணியில் இருந்த பெரியார்கள் பலர். அவர்களில் திரு. ஆ. வல்லிபுரம், அவரது மகன் வைத்திலிங்கம், திருவாளர்கள் காலஞ்சென்ற ந. கந்தையா, வ. பண்டிதர் என்போரும் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் திரு. த. ஐயாத்துரை என்பவரும் குறிப்பிடத்தக்கவர்கள். திரு. ஐயாத்துரை அவர்கள் மலாயாவில் இருந்து நிதிசேகரித்து பெரியளவிலான எழுந்தருளிப் பிள்ளையாரை செய்வித்துக்கொடுத்துள்ளார்.

விநாயகர் ஆலயங்கள் பலவற்றிலும் இல்லாத பல சிறப்புகளை இவ் ஆலயம் கொண்டுள்ளது. 1957 இல் முதன் முறையாக பெருஞ்செலவுடன் ஆலயந் திருத்தப்பட்டு கும்பாபிஷேகமும்-அதைத் தொடர்ந்து சங்காபிஷேகமும் செய்யப்பட்டது. அதன்பின் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை திருத்த வேலைகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

இன்று இவ் ஆலயத்தில் நவக்கிரகங்களுக்கும் விஷ்ணு, சுப்பிரமணியர், நடராஜர், கஜலெட்சுமி ஆகிய தெய்வங்களின் திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு தனித்தனி மண்டபங்கள் அமைக்கப்பட்டு தவருது பூசை ஆராதனைகள் செய்யப்பட்டு வருகின்றது. இவற்றை விட யாழ்ப்பாணத்தில் எந்த ஆலயத்திலும் இல்லாத இன்னெரு சிறப்பும் இவ் ஆலயத்துக்கு உண்டு. திருமுறை தந்த செல்வர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், சேந்தனர், திருமூலர், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் ஆகிய எண்மருக்கும் தனிமண்டபம் அமைத்து சிறந்த வழிபாடு இயற்றப்படுகிறது. இதைவிட தேர்த்திருவிழாவன்று, பிள்ளையார் தேருலாவுக்கு வரும் போது சேந்தனர் திருவுருவமும் கொண்டு செல்லப்பட்டு தேரடியில் திருப்பல்லாண்டுஓதப்படுகிறது. அதைத் தொடர்ந்தே தேர் உலா ஆரம்பமாகிறது. சகல சிறப்பம்சங்களும் கொண்ட அழகிய சித்திரத்தேர் 1975ம் ஆண்டில் கலாகேசரி திரு. தம்பித்துரையினல் உருவாக்கபபட்டது.

திருமதி ஜெயலக்ஷ்மி சோமசுந்தரம்
(சங்கீத ஆசிரியை)


## பிரயாண ஒழுங்குகள்

● கனடா ● ஈராக்
● சவூதி அரேபியா
● டென்மார்க் ● ஜேர்மனி

(1) கனடா, டென்மார், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

இ. தேவராசா
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை)
R/24694


★ அணுகுண்டுத் தயாரிப்புத் தகவல்; ரஷ்யா சீற்றம்

# பாகிஸ்தான் திசைமாறி செல்ல முற்படுகின்றது!

(புதுடில்லி)

பாகிஸ்தான் அணுகுண்டு நிலையில் உள்ளது என்று வெளியாகியுள்ள செய்தி உலக நாடுகளுக்கிடையே குறிப்பாக ஆசிய நாடுகளிடையே பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது என சோவியத் யூனியன் கருத்து வெளியிட்டுள்ளது

சோவியத யூனியனின் சார்பில் இக் கருத்தைத் தற்போது பாரதத்திற்கு விஜயம் செய்துள்ள சோவியத் துணை ஜனதிபதி திரு தக்லிவ் தெரிவித்துள்ளார்.

இந்துமாகடல் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த பாரதமும் இதரநாடுகளும் மண்டலசார்பற்ற நாடுகள் இயக்கம் மூலம் பாடுபட்டுக் கொண்டிருக்கையில் பாகிஸ்தான் மட்டும் வேறு திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

அவர் பாரத சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களிலும் பங்கேற்றுர்.

இவ்வருடம் சோவியத் தலைவர் திரு. கொர்பசேவ் பாரத விஜயம் மேற்கொள்ளவுள்ளது குறித்துக் குறிப்பிட்ட அவர், 'இவ் விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் வலுப்பட உதவும்' என்று நம்பிக்கை வெளியிட்டார்.

ஆந்திராவில் பெருவெள்ளம்

# 30 லட்சம் மக்கள் பாதிப்பு; 60 பேர் மடிவு

ஆந்திராவில் பெய்து வரும் பேய் மழையால் முப்பது இலட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலை ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மாநில நிலைபற்றி நேரில் அறிந்து கொள்ள மத்திய அரசின் குழு ஒன்று இங்கு வந்துள்ளது.

வெள்ளத்தால் இதுவரை 60 பேர் மடிந்துள்ளனர்

250 கிராமங்கள் முற்முக நீரில் மூழ்கியுள்ளன.

இரண்டு இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துச் சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கோதாவரிநதி பெருக்கெடுத்துள்ளது. தடுப்புச் சுவர்கள் இடிந்துள்ளன.

ஆந்திர வெள்ள நிவாரணத்திற்குத் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் நிதியுதவிவழங்கியுள்ளார்

# பாகிஸ்தானில் வன்முறை நீடிக்கிறது ஐவர் பலி, பொலிஸ்நிலையம் மீதும் தாக்கு

(லாகூர்)

எதிர்க் கட்சித் தலைவி செல்வி பெனுஸிர் பூட்டோவின் ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நிகழ்ந்த மோதலில் ஒரு பொலிஸ்காரர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வீச்சில் இறங்கிய கும்பலைக்கலைக்கப் பொலிஸார்துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர்.

கலகக்காரர்கள் பொலிஸ் நிலையம் ஒன்றைத் தாக்கிப் பல கைதிகளை விடுவித்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

செல்வி பூட்டோவும் பல எதிர்க்கட்சித் தலைவர்களும் கைது செய்யப்பட்டதனையடுத்து எழுந்த கலவரம் கடந்த சனிக்கிழமை மூன்ருவது நாளாகவும் நீடித்தது.


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். அபி. சபையால் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாந்திகதி (9. 9. 86) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலைகள் செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத்திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் ஆகிய ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாந்திகதி பி. ப. 2.00மணிவரை (5.09.86) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/–), மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (250/–) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் (கச்சேரி) வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம், கேள்வி வைப்புப்பணம் ஆகியன காசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக்கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும்.

கேள்விகள் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாந் திகதி காலை 10.15மணிக்கு யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பாடசாலையின் பெயர் | விபரம் | பதிவு செய்திருக்க வேண்டியதொகை |
|---|---|---|
| 1. யா/நாவலர்ம.வி. | மேல்மாடி படி2 90' 9'' × 25' 0'' | 350,000.00 |
| 2. யா/மாதகல்சென் யோசப்வித்தியாலயம் | பாடசாலைக் கட்டிடம் 100' 0'' × 20'0'' | 200,000.00 |
| 3. யா/ மண்டைதீவு ம.வி. | விருந்தை விஸ்தரிப்பு 100' 0'' × 8' 0'' | 60,000.00 |

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1986/08/15.
B/1466


## மின்தடை

(கரவெட்டி)

கரவெட்டிப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக மின்சாரம் இடையிடையே தடைப்பட்டுவருகின்றது. இதனல் இப்பகுதி மக்கள் மின்சாரத்தை நம்பி எந்தவேலையும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதேவேளை தற்போது நடைபெற்றுவரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுப்போரும் பெரும் இன்னலுக்குட்பட்டுவருகின்றனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சித்திவிநாயகர் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. நாளை தீர்த்தோற்சவம் இடம் பெறுகின்றது.

## திருவிளக்கு பூசை

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட மேற்கில் (ஆனைக்கோட்டை) எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் 19ம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் பௌர்ணமி தின ஆலய பூசையைத் தொடர்ந்து இவ் வருடத்திய பதிஞேராவது ''திருவிளக்குப் பூசை'' நடைபெறவுள்ளது.

ஈழமுரசு

## முல்லைத்தீவு பாதை ஊடாகவே மீண்டும் கண்டிவீதி பஸ்கள்

(கிளிநொச்சி)

பரந்தனுக்கும் கிளிநொச்சிக்குமிடையில், கண்டி வீதியில் கற்கள் அடுக்கப்பட்டு போக்குவரத்து செய்ய முடியாதபடி தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே நேற்று முன்தினம் காலை தொடக்கம் கண்டிவீதியில் செல்லும் சகல வாகனங்களும் முல்லைத்தீவு வீதிவழியாக முரசுமோட்டை, திருவையாறு, இரணைமடு ஆகிய பகுதிகளைச்சுற்றி கண்டிவீதியை அடைந்து போக்குவரத்தை மேற்கொண்டு வருகிறது.

### நிரந்தர உறைவிடம் தேடி வந்தோம்!

# மே. ஜேர்மனியிலிருந்து கனடா வந்ததை பயணிகள் ஒப்புக் கொண்டனர்!

### மாலுமிக்கு பிடிவிருந்து

(ஒட்டாவா)

மேற்கு ஜேர்மனியிலிருந்தே தாங்கள் 152 பேரும் கப்பலில் கனடா சென்றனரென்பதை இக்கப்பலில் பயணம் செய்த தமிழர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜேர்மனியில் தொடர்ந்து வசிப்பதற்கு முடியாதிருந்ததால், நிரந்தர உறைவிடமொன்றைப் பெறுவதற்காகவே தாங்கள் இந்தியாவிலிருந்து வந்ததாகப் பொய் சொல்ல நேர்ந்ததாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஜேர்மனியிலிருந்து கப்பலொன்றில் ஏற்றிவரப்பட்டு, கனடாவுக்கு அண்மையில் கடலில் இறக்கப்பட்டபோது இரண்டு ட்ரம் குடிநீரும் சேர்த்து இறக்கப்பட்டதாக ந விஜயநாதன் என்ற அந்தத் தமிழர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, குறிப்பிட்ட மேற்கு ஜேர்மன் கப்பலின் மாலுமியை கைது செய்ய சர்வதேச பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'ஹெலி' திடீர்...

சுமார் பதினொரு மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரையும் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. திருநகர், கணேசபுரம், கனகபுரம், ஜெயந்திநகர், எட்டாம் வாய்க்கால் ஆகிய கிராமங்களுக்கு மேலாக ஹெலிகப்டர் வட்டமிட்டுத் தாக்கியது.

வயல்களில் அறுவடையிலீடுபட்டுக்கொண்டிருந்த ஆண்களும் பெண்களுமான தொழிலாளர்கள் அங்குமிங்கும் சிதறியோடினர்.

இடம்பெயர்ந்த பகுதிகளில் மீண்டும் போய்க் குடியேறியிருந்த ஓரிரு குடும்பங்களும் இசசம்பவம் காரணமாக மீண்டும் வெளியேறின. பொது மக்களை மீண்டும் பழைய இடங்களில் வந்து குடியேறுமாறும், தாம் அதற்குப் பாதுகாப்பு வழங்குவதாகவும் இராணுவத்தினர் அடிக்கடி கூறி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### "ராணுவ சதி"

வேண்டும் என்று விஜே தம்மிடம் நேரில் தெரிவித்ததாகவும் உமா மகேஸ்வரன் இப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி பாஸிஸ ஆட்சி நடத்துகிறார் என்றும், அவரது போக்கில் அவர் எந்த மாற்றத்தையும் காணவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தமிழருக்கு...

தேச விரோதிகள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நிவித்திகலையில் கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி எவர் எதிர்த்தாலும் தனது திட்டத்தை தாம் நடைமுறைப்படுத்தியே தீரப்போவதாகவும் உறுதியளித்தார்.

### யாழ். பல்கலைக்கழக மாணவர்

## இரண்டு மாத காலத்துள் 33 கிணறுகள் அமைத்தனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அசம்பாவிதங்களையடுத்து பாதிப்படைந்த மக்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் செய்யப்பட்ட உதவிகளுக்கும், குறிப்பாக கிளிநொச்சியின் மிகவும் பின் தங்கிய கிராமமான பாரதிபுரத்தில் சுமார் முப்பத்திமூன்று கிணறுகளை அமைத்துக் கொடுத்தமைக்காகவும் கிளிநொச்சி பிரஜைகள் குழு, அத்தியாவசிய சேவைக்குழு, பாரதிபுர மக்கள் ஆகியோர் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்கள் அதிகமாக வாழும் பாரதிபுரம் கிராமத்தில் இரண்டு மாதங்களில் பல்கலைக்கழக மாணவர்களினால் முப்பத்திமூன்று கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டமையினால் அம்மக்கள் புதிதாக பயிர் செய்யக் கூடியதாகவுள்ளது.

அண்மைக்கால அசம்பாவிதங்களைத் தொடர்ந்து மிகுந்த வறுமை நிலையை அடைந்திருந்த இக்கிராம மக்கள் கிணறுகள் அமைப்பின்போது சில காலம் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

## கோட்டையும் 'சென்ரி'யும் நேற்று "வேட்டு" மோதல்!

(வண்ணார்பண்ணை)

கோட்டை இராணுவத்தினர் நேற்றுமாலை 'சென்ரி' போராளிகளை நோக்கி 'ஷெல்' தாக்குதலையும், துப்பாக்கி வேட்டுக்களையும் சரமாரியாகத் தீர்த்தனர். இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. போராளிகளும் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டனர்.

இராணுவம் ஏவிய 'ஷெல்' தந்தை செல்வநாயகம் ஸ்தூபி அருகே விழுந்து வெடித்துச் சிதறியதில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் கோட்டை இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையே தாக்குதல்கள் தொடர்ந்தன.

### குடாநாட்டில்...

இங்கு கொண்டுவரப்பட்டார். இவரை நேரத்துக்கு இங்கு கொண்டுவந்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும் என ஆஸ்பத்திரிவட்டாரங்கள்தெரிவித்தன.

### முகாம் மீது...

புலிகளின் போராளி ஒருவர் காயமடைந்தார். விடுதலைப் புலிகள் ராணுவமுகாமை நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

### ட்ரோலர் மீது...

தடவை வட்டமிட்டு பறந்த பின் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டது.

மீனவர்கள் பீதியடைந்து வலையை வெட்டிவிட்டு ட்றோலரை கரைநோக்கி செலுத்தினர். இருந்தும் தொடர்ந்து ஹெலியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ட்றோலரில் நின்ற மீனவ இளைஞர் ஒருவரின் கையில் பலதத காயம் ஏற்பட்டது. அதே நேரம் வல்வை இராணுவ முகாமிலிருந்தும் ட்றோலரை நோக்கி சூடு விழுந்தது.

அப்போது வந்த விடுதலைப் புலி போராளிகள் ஹெலிக்கொப்டர் மீது தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலால் நிலைகுலைந்த ஹெலி வேகமாக உயரப் பறந்து சென்றது.

போகும்போது கரையோரமாகச் சுட்டுக்கொண்டு சென்றது. இதனால் கரையோர வீடுகள பல சேதமடைந்தன. காயம்பட்ட இளைஞர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மகோற்சவம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று பதினெட்டாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

22ஆம் திகதி வெள்ளி தங்கரத வெள்ளோட்டமும், 27ஆம் திகதி புதன் இரதோற்சவமும், 28ஆம் திகதி தீர்த்தோற்சவம், ஸ்ரீ ரங்கநாதர் திருவடி பூசை, பொன்னூஞ்சல் என்பனவும், 29ஆம் திகதி வெள்ளி வைரவர் பொங்கல், திருக்கல்யாணம் பூங்காவனம் என்பனவும் நடைபெறவுள்ளன.

### டில்லியில்...

புதுடில்லிக்குப் பயணமானார்கள்.

டில்லி வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் நேற்றிரவு இவர்கள் பேச விருந்தனர்.

### மட்டுநகருக்கு...

சூழ்நிலையை வைத்து வாரத்தில இரண்டு அல்லது மூன்று சேவைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய அத்தியட்சகர் திரு. சொக்கலிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை பயணிகளின் நன்மை கருதி ஆழியவளை, நெடுங்கேணி பஸ் சேவைகளும மீண்டும் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## கிளிநொச்சி சப்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் முதல் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இரு பகுதியினருக்குமிடையே கடும் மோதல் இடம் பெற்றவண்ணமிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஹெலிகப்டர்கள் பரவலாக பறந்து திரிந்ததாகவும், பலத்த சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 10 இலங்கையர் பிரான்ஸில்கைது

(பாரிஸ்)

மேற்கு ஜெர்மனியில் இருந்து பிரான்ஸின் கிழக்கு பகுதிகள் நுழைய முயன்ற பத்து இலங்கையர்களை எல்லைக்காவலில் உள்ள பிரான்ஸ் பொலிஸார் தடுத்துவைத்துள்ளனர். இவர்கள் இரு கார்களில் அங்கு சென்றபோது பிடிபட்டனர்.

## பயணிகள் தங்குமடம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரயாணிகள் நலன் புரிச் சங்கம் பொதுமக்களின் உதவியுடன் அராலித் துறைமுகத்தில் பயணிகள் தங்கும் மடம் ஒன்றினை அமைக்கவிருக்கிறது. இதற்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. இத்துறைமுக மேடையினை விஸ்தரித்து அமைப்பதிலும் இச் சங்கம் தீவிர பங்கு கொண்டு வருகிறது

## நயினை யில் இன்று தேர்

(புங்குடுதீவு)

வரலாற்றுப் புகழ்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலய இரதோற்சவ விழா இன்று காலை (18-8-86) நடைபெறும். நாளை காலை தீர்த்தோற்சவமும், மறுநாள் மாலை தெப்பத்திருவிழாவும் இங்கு நடைபெறும். "அமுதசுரபி" மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

## கெடுபிடி பற்றி முறையீடு

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்தில் கடமை புரியும் தனியார் புகையிரத பாதுகாப்பு ஊழியரின் பிரயாணிகளின் மீதான கெடுபிடிகள் பற்றி புகையிரதப்பகுதி உயர் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் விரைவில் நிறுத்தப்படும் என அந்த அதிகாரி உறுதியளித்துள்ளார்.

## திருந்தாத ஜென்மங்கள்

(வேலணை)

ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் சட்டவிரோத மின்சாரத்தைத் தடுக்கும் நோக்குடன் வேலணை இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர் திரு. மார்க்கண்டு விஜயஸ்ரீ நேரில் அவ்விடத்திற்குச் சென்று ஒருபகுதிக்கான மின்சாரத்தை துண்டித்து மின் கேபிளை மின்கம்பத்துடன் கட்டிவைத்துவிட்டு சென்றார். இச் சட்டவிரோதிகள் அதனை கழற்றி மீண்டும் தொலைபேசிக் கம்பிகள்மூலம் மின்சாரத்தை பெற்றுள்ளதை அவதானிக்க கூடியதாயுள்ளது



## முக்கிய அறிவித்தல்

வடபிராந்திய லொறி போக்குவரத்து சங்கத்தின் பொதுக் கூட்டம் 19-8-86 நாளை (செவ்வாய்க்கிழமை) காலை ஒன்பது மணிக்கு ஹோட்டல் ஞானம்ஸ் மண்டபத்தில் நடைபெறும். சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தலைவர்,
வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம்.

B/25307



## மரண அறிவித்தல்

### திருமதி இராஜபூபதி அருணாசலம்

திருமதி இராஜபூபதி அருணாசலம் சிவபதமடைந்துள்ளார். இவர், முன்னாள் மட்டுவில், கல்வத்தை சிவன் கோவில் தர்மகர்த்தா; காலஞ்சென்ற துரைசிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், முன்னாள் சாவகச்சேரி நகராட்சி மன்ற நகர பிதாவும், ஓய்வுபெற்ற மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. நமசிவாயம் அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இரகுபதி நவரத்தினம் அவர்களின் அருமைத் தாயாரும், முன்னாள் சாவகச்சேரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்களின் அன்பு மாமியாரும், கலாநிதி சிறீ நமச்சிவாயா (U S A), சிறீவல்லி புரானநதன் (கனடா), மைத்திரேயி, சிறீ சண்முகாநந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 18 08-1986 திங்கட்கிழமை மாலை 4-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

R/25303

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலா வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 18-8-1986 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437